DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.50/2022**

**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.08 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 08 | தொழில் | - | |
| பெயர் | - | ஞானசேகர் | வட்டம் | - | |
| த/பெ | - | மணி | சமயம் | - | |
| கிராமம் | - | போத்தனுார், செட்டிப்பாளையம் | வயது | - | 47 |
| சாதி | - | | | | |

**<u>25.10.2024</u>**

**(2-ம் எதிரி ஆஜர். 1-ம் எதிரி ஆஜரில்லை. 1-ம் எதிரி தரப்பில் குவிமுச.பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் கோயம்புத்துாரில் போத்தனுார் செட்டிப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 03.04.2021-ம் தேதி வால்பாறையில் மாணிக்க எஸ்டேட்டில் இருக்கும் எனது சித்தி மகள் அ.சா.1 கோகிலாவை எதிரிகள் அடித்துவிட்டதாக கேள்விப்பட்டு நான் 04.04.2021-ம் தேதி வால்பாறை வந்தேன்.அப்போது மாணிக்க எஸ்டேட்டில் சம்பவம் நடந்த இடத்தை போலீசார் வந்து பார்வையிட்டு படம் வரைந்தார்கள். சம்பவயிடத்திலிருந்து மரக்கட்டை ஒன்றும், கல் ஒன்றும் கைப்பற்றினார்கள். அதற்காக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையொப்பமும், கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2-வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3-ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கல்லும், கட்டையும் (PR.No.55/2022) என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியவை அல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. போலீசார் என்னை எந்த தேதியில், எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 04.04.2021-ம் தேதி காலையில் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். பின்பு காவல் நிலையம் அழைத்தும் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் அ.சா.1 எனது சித்தி மகள் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் அ.சா.1 எனது உறவினர் என்று சொல்லியிருந்தேன். நான் போலீசாரிடம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் கையெழுத்து செய்தேன். எத்தனை கையொப்பம் செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. எந்த தேதியில் கையொப்பம் செய்தேன் என்றால் 04.04.2021-ம் தேதியில் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் பகலில் செய்தேனா இல்லை இரவில் செய்தேனா என்றால் பகலில் தான் கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேனா என்றால் ஆமாம்.

2. அ.சா.1 எனது தங்கச்சி என்பதால் அவருக்காக போலீசார் கேட்டுக்கொண்டதின்படி நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்யும் போது வேறு யாரிடமாவது கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை. நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். அ.சா.1 எனது தங்கச்சி என்பதால் தான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை </u>**:இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.